**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.2/2023**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | **:** | **DW.1** |
|---|---|---|
| Name | : | சுப்பன் |
| Father's / Husband's Name | : | மாரன் |
| Village / முகவரி | : | சிறுமுகை,மேட்டுப்பாளையம் |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 23rd June 2025

**முதல் விசாரணை**

நான் சிறுமுகையில் உள்ள வெங்கிட்டராமபுரத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். வாதிகளை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

எனது ஆதார் அடையாள அட்டை நகல் . பி. வா. சா.ஆ. 1. ஆகும்.

தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

மாரன் எனது தகப்பனார் என்றால் சரிதான். ரங்கம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். நானும் வாதி பழனிச்சாமி, நஞ்சுக்குட்டி மற்றும் பொன்னுச்சாமி ஆகியோர்கள் மாரன் மற்றும் ரங்கம்மாளின் வாரிசுகள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு விவசாய பூமிகள் இருந்தது என்றால் சரிதான். 29.06.1988 ல் நானும் எனது தகப்பனாரும், எனது தாயாரும் மற்றும் எனது சகோதரர்களும் சேர்ந்து பாகம்

பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். காலை எண்.805/6 ல் உள்ள பூமி எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

அந்த சொத்தை 29.06.1988 ம் வருடத்திய பாகப் பத்திரத்தில் காண்பிக்க ப்படவில்லை என்றால் சரிதான். நஞ்சுக்குட்டி 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் 01.09.2022 ம் தேதி எழுதி வைத்தார் என்றால் சரிதான். அதை பதிவு செய்ய மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்தை அவருக்கு உரிமையில்லை என்றும் அதை பதிவுசெய்ய இயலாது என்று சார்பதிவாளர் திருப்பி கொடுத்து விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தை பொறுத்த வரை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வேறு ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை தாக்கல் செய்து அதை சார்பதிவாளர் பதிவு செய்ய மறுத்து விட்டதாக கூறி அந்த பத்திரத்தை பதிவு செய்ய உத்தரவிடும்படி பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சார்பதிவாளர் அலுவலகத்தில் முதலில் காலை எண். 805/6 ல் 50 செண்ட்க்கு தான் கொடுக்கப்பட்டது ஆனால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 4 ஏக்கர் 3 செண்ட் க்கு சேர்த்து தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை பொறுத்து ஒரு பொய்யான பத்திரத்திற்கு உத்தரவு பெற்றிருக்கிறேன் என்றால் அதுபற்றி தெரியாது.

அந்த சொத்தை பொறுத்து இன்றைய தேதிவரை பாகம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காலை எண்.805/6 பொறுத்து சிட்டா அடங்கல் யார் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காலை எண்.805/6 நஞ்சுக்குட்டிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் எதுவும் இல்லையென்றால் பாகசாசன பத்திரம் உள்ளது. அந்த பாகசாசன பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் பாகசாசன பத்திரம் இல்லயென்றும் இருந்திருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. காலை எண். 805/6 ல் 4 .58 ஏக்கர் பூமியானது மாரன் ரங்கம்மாள் வாரிசுகளான நான், வாதி, நஞ்சுக்குட்டி மற்றும் பொன்னுச்சாமி ஆகிய நான்கு பேர்களுக்கும் சரிசமமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

அந்த சொத்தானது நஞ்சுக்குட்டி அனுபவத்தில் இருந்ததாகவோ அவருடைய வாரிசுகள் அனுபவித்து வந்ததாகவோ இல்லையென்றால் நஞ்சுக்குட்டியின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது. நஞ்சுக்குட்டி அனுபவத்தில் இருந்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் தான செட்டில்மெண்ட் பத்திரம் உள்ளது. அந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் பொய் பத்திரம் என்றும் அதை எழுதி கொடுக்கவில்லை என்றால் அது பொய் என்று எனக்கு தெரியாது. நஞ்சுக்குட்டியின் வாரிசுகள் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.06.23 19:01:35 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.